FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319408 09/AC/2026/KM

1. District : Kanchipuram PS: Anticorruption vigilance and Kanchipuram Year: 2026 FIR No.: Date: 04.07.2026 at 16.30hrs.
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The prevention of corruption Act. 1988 (as amended 2018) Sections பிரிவுகள்: U/s. 7(a) & 12 R/w 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 03.07.2026 Date to : Between
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 16.00hrs
   Time Period : Time from : Time to : to
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை 23.30hrs.
   (b) Information Received at PS. Date : 04.07.2026 Time : 16.00hrs.
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) 04.07.2026 Time : 16.00hrs & 16.30hrs.
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : written.
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North-East at about 3.5 km. Kanchipuram City Municipal Corporation.
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : — (b) Address : Hospital Road, Kanchipuram.
   முறைக் காவல் எண் முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. R. Vengidesan (b) Father's/ Husband's Name :
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : — (d) Nationality : Indian (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : — Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Spl. Tahsildar (L.A) (g) Address : New Green Field Airport Scheme, Zone-3, Unit-4, Kanchipuram, (I/c) Dy. Inspection Cell Officer, Kanchipuram
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) Tr. Subash, AE (planning) 2) Tmt. M. Sathavalli, Assistant, 3) Tr. S. Bharathkumar, Revenue Assist. 4) Tr. Mohanraj, JA, 5) Tr. Ashok kumar, RC, 6) Tr. Panneerselvam, OA, 7) Tr. Pavithraj, S/o. Muthu, 8) Tr. P. Ranjeeth Kumar, S/o. Balakaran, 9) Tr. T. priyatham kumar, S/o. Duraisamy.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

[Proj]

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Un-explained money of Rs.37,710/-

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு During the Surprise check conducted at Kandhipuram City Municipal corporation.

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate FIR contents herewith enclosed

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed R. Geetha Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS. I/R-2, Kandhipuram Police Station of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
04/7/2026.

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும். நேரமும்
05.07.2026 at 09.00hrs.

Name பெயர் R. Geetha
Rank: நிலை Inspector of Police, No. எண் .....
I/R-2, Kandhipuram.

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.03/AC/2026/KM, U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

Accused Officers: 1) திரு.சுபாஷ், உதவி பொறியாளர் (திட்டம்), நகரமைப்புப் பிரிவு, காஞ்சிபுரம் மாநகராட்சி 2) திருமதி.எம்.சந்தவள்ளி, ஆ-1 உதவியாளர், வருவாய் பிரிவு, காஞ்சிபுரம் மாநகராட்சி 3) திரு.எஸ்.பரத்குமார், வருவாய் உதவியாளர் பொதுப்பிரிவு, காஞ்சிபுரம் மாநகராட்சி 4) திரு.மோகன் ராஜ், இளநிலை உதவியாளர், பொது பிரிவு மற்றும் மேயரின் உதவியாளர், காஞ்சிபுரம் மாநகராட்சி 5) திரு.அசோக் குமார், பதிவறை எழுத்தர், பிள்ளையார் பாளையம் வரி வசூலிக்கும் மையம், கிருஷ்ணன் தெரு, காஞ்சிபுரம். 6) திரு.பன்னீர்செல்வம், அலுவலக உதவியாளர், நகரமைப்புப் பிரிவு, காஞ்சிபுரம் மாநகராட்சி **Private Individuals/ Contractors:** 7) திரு.மு.பவித்ராஜ், (Out Sourcing) த/பெ.முத்து, எண்.50, நாகலத்தமேடு, அரசமர பின்தெரு, சின்ன காஞ்சிபுரம்.	இன்று 04.07.2026-ம்தேதி 16.00 மணிக்கு நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம் அவர்களிடம் திரு.R.வெங்கடேசன், தனி வட்டாட்சியர் (நிஎ), புதிய பசுமைவெளி விமான நிலைய திட்டம், மண்டலம்-3, அலகு-4, காஞ்சிபுரம், (I/c,) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் என்பவர் கொடுத்த புகார் மனு விவரம் பின்வருமாறு, அனுப்புநர், திரு.R.வெங்கடேசன், தனி வட்டாட்சியர் (நிஎ), புதிய பசுமைவெளி விமான நிலைய திட்டம், மண்டலம்-3, அலகு-4, காஞ்சிபுரம், (I/c,) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, காஞ்சிபுரம், ந.க.எண்:-99/2026/I-1, நாள்:-04.07.2026, அய்யா, பொருள்: திடீர் கூட்டாய்வு - மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) காஞ்சிபுரம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு - காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகத்தை - 03.07.2026 திடீர் கூட்டுடாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பாக பார்வை: செயல்முறைகள், ந.க.எண்:-99/2026/ I-1, நாள்.03.07.2026, காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகத்தில், பொது மக்களிடமிருந்து கூடுதலாக வரி வசூல் செய்வதாகவும், நகரமைப்பு அலுவலர்கள் மனை வரன்முறை படுத்துதல், கட்டிட வரைபட அனுமதி வழங்கவும், சுகாதார பிரிவில் பிறப்பு, இறப்பு போன்ற சான்றுகள் வழங்குவதற்காகவும், நில அளவை பிரிவில் இடங்களை பார்வையிட்டு உட்பிரிவு செய்வதற்கும் லஞ்சப்பணம் வசூலிப்பதாகவும் மற்றும் மாநகராட்சி பொறியியல் பிரிவில் சாலை அமைப்பு மற்றும்

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.03/AC/2026/KM, U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

8) திரு.பா.ரஞ்சித் குமார், த/பெ.பாஸ்கரன், ஜி-1, கராஜ் புளூ பெல் அப்பார்ட்மெண்ட், ஜாஸ்மின் கார்டன், டாக்டர்ஸ் காலனி, முடிச்சூர் ரோடு, சென்னை-45 9) திரு.து.பிரியதம் குமார், த/பெ.துரைசாமி, டீம் லீடர், புரோஜக்ட் மேனேஜ்மெண்ட் கன்சல்டன்ஸி, (யூ.ஜிடி), காஞ்சிபுரம்.	குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு நீர் அகற்றுதல், தெரு விளக்குகள் பராமறிப்பு, அரசு நிதி மற்றும் பொது நிதியில் இருந்து திட்ட செயலாக்கம் ஆகிய பணிகளில் முறைகேடுகள் நடப்பதாகவும் கிடைத்த ரகசிய தகவலின்பேரில், நானும், காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் விஜிலன்ஸ் குழுவினருடன்

காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகத்தில், நேற்று 03.07.2026-ம் தேதி என்னுடைய தலைமையில் இரு துறை திடீர் கூட்டாய்வு மாலை 16.00 மணியளவில் மாநகராட்சி அலுவலகத்திற்கு உள்ளே சென்று மாநகராட்சி ஆணையர் அலுவலக அறைக்கு சென்றபோது, அப்போது அங்கு மாநகராட்சி ஆணையரின் நேர்முக உதவியாளர் திரு.ஆனந்தன், அலுவலக உதவியாளர் திரு.புஷ்பராஜ் மற்றும் உதவியாளர் திரு.வினோத்குமார் ஆகியோர்கள் பணியிலிருந்தனர். என்னுடன் வந்திருந்த காவல் துணை கண்காணிப்பாளர் திரு.க.வே.கலைசெல்வம் மற்றும் விஜிலன்ஸ் குழுவினரை அறிமுகம் செய்துகொண்டு மாநகராட்சி ஆணையர் அவர்களை பற்றி கேட்ட போது அவர் அலுவலகத்தில் இல்லை என்பதை அறிந்து, நேர்முக உதவியாளர் திரு.ஆனந்தன் மூலமாக சோதனை குறித்த தகவல் தெரிவித்தன் பேரில் மாநகராட்சி ஆணையர் திரு.ரா.வினோத் அவர்கள் மாலை சுமார் 16.15 மணிக்கு அவரது அலுவலக அறைக்கு வந்தார். மேலும் அலுவலகத்தின் வருவாய் பிரிவு அலுவலக அறையில் ஆஜரில் இருந்த கண்காணிப்பாளர், (கூ.பொ) உதவி ஆணையர் திரு.வரதராஜன், பொறியியல் பிரிவில் இளநிலை பொறியாளர் திரு.வைத்தியநாதன் மற்றும் அலுவலக பணியாளர்கள், ஒப்பந்ததாரர்கள் / தனிநபர்கள் ஆகியோர் அலுவலகத்தில் இருந்தனர். மேலும் அலுவலகத்தை ஒவ்வொரு பிரிவு வாரியாக சோதனை செய்த போது, வருவாய் பிரிவில் ஆஜரில் இருந்த அலுவலக பணியாளர்கள் 1) திருமதி.சந்தவள்ளி, உதவியாளர் என்பவரிடமிருந்து பணம் ரூ.3220/-, 2) திரு.பன்னீர்செல்வம், அலுவலக உதவியாளரிடமிருந்து பணம் ரூ.2000/-, 3) திரு.சுபாஷ், உதவி பொறியாளர் (திட்டம்) என்பவரிடமிருந்து பணம் ரூ.5500/- 4) திரு.பவித்ராஜ், தற்காலிக பணியாளர்

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.03/AC/2026/KM, U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

என்பவரிடமிருந்து பணம் ரூ.4,020/- மற்றும் ஒப்பந்ததாரர்களான 5) திரு.ரஞ்சித் குமார் என்பவரிடமிருந்து பணம் ரூ.17,500/-, 6) திரு.பிரியதம் குமார் என்பவரிடமிருந்து பணம் ரூ.5,470/- ஆக மொத்தம் பணம் ரூ.37,710/- குறித்து சம்மந்தப்பட்டவர்களிடம் விளக்கம் கேட்ட போது சரியான முகாந்திரம் அளிக்காத காரணத்தினால் மேற்படி பணம் லஞ்சமாக அரசு அலுவலர்கள் பொது மக்களிடமிருந்து பெற்றிருக்கூடும் மற்றும் ஒப்பந்ததாரர்கள் லஞ்சப்பணம் கொடுக்க வந்திருக்ககூடும் எனக்கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் அரசு பணியாளர்களின் கைப்பேசியை ஆய்வு செய்ததில் G-Pay மற்றும் Phone-Pay மூலம் சந்தேகப்படும்படியான பணப்பரிவர்த்தனைகள் 1) திரு.அசோக் குமார், பதிவறை எழுத்தர் 2)திரு.பரத்குமார், வருவாய் உதவியாளர், 3) திரு.பன்னீர்செல்வம், அலுவலக உதவியாளர், 4) திரு.மோகன்ராஜ், இளநிலை உதவியாளர் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர். மேலும் இரு துறை கூட்டாய்வின் போது கீழே கண்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக செயல்முறை ஆணை என்னால் தயார் செய்யப்பட்டு அனைத்து அலுவலர்களிடமும் கையொப்பம் பெறப்பட்டது. கீழ்கண்ட ஆவணங்கள், சரியான விளக்கம் அளிக்காத பணம் ரூ.37,710/- மற்றும் இதர ஆவணங்களை பார்வையில் கண்ட செய்ல்முறைகளின்படி இத்துடன் இணைத்து சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க தங்களிடம் ஒப்படைக்கிறேன். (ஒப்பம் xxxx) தனி வட்டாட்சியர் (நி.எ), புதிய பசுமைவெளி விமான நிலைய திட்டம், மண்டலம்-3, அலகு-4, காஞ்சிபுரம், (I/c,) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் **இணைப்பு** - 1) திடீர் கூட்டாய்வு செயல்முறைகள் ந.க.எண்:-99/2026/I-1, நாள்.03.07.2026 (அசல்), 2) சரியான விளக்கம் அளிக்கப்படாத பணம் ரூ.37,710/-, 3) i) திருமதி.சந்தவள்ளி உதவியாளர், ii) திரு.பன்னீர்செல்வம், அலுவலக உதவியாளர், iii) திரு.சுபாஷ், உதவி பொறியாளர் (திட்டம்), iv) திரு.அசோக் குமார், பதிவறை எழுத்தர், v) திரு.பரத்குமார், வருவாய் உதவியாளர், மற்றும் vi) திரு.மோகன்ராஜ், இளநிலை உதவியாளர் ஆகிய அரசு அலுவலர்களின் தன்னிலை விளக்கம், 4) i) திரு.பவித்ராஜ், தற்காலிக பணியாளர், ஒப்பந்ததாரர்கள் ii) திரு.ரஞ்சித் குமார் iii) திரு.பிரியதம்குமார் ஆகிய தனிநபர்களின் தன்னிலை விளக்கம், 5) அரசு பணியாளர்கள்-4 i) திருமதி.சந்தவள்ளி, உதவியாளர், ii) திரு.பன்னீர்செல்வம், அலுவலக உதவியாளர், iii) திரு.சுபாஷ், உதவி பொறியாளர் (திட்டம்), iv) திரு.பரத்குமார், வருவாய் உதவியாளர், மற்றும் தனி நபர்கள்-3 i)திரு.ரஞ்சித் குமார் ii) திரு.பிரியதம்குமார் மற்றும் iii) திரு.பவித்ராஜ் ஆகியோர்களின்

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.03/AC/2026/KM, U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

வாக்குமூலங்கள். 6) கூட்டாய்வின் போது உண்மை ஆவணங்களாக சான்றொப்பமிட்டு கைப்பற்றப்பட்ட நகல்கள் i) வருகைப் பதிவேடு (5 பிரிவுகள்). ii) Remittance / Application Register (5), iii) G-Pay பணப்பரிவர்த்தனை விவரம் (4). Received a complaint on 04.07.2026 at 16.00 hr. and Inspector Tmt.R.Geetha for n/a and register a case Sd/- xxxx DSP, V&AC, Kanchipuram 04.07.2026 காஞ்சிபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), காஞ்சிபுரம் அவர்களின் இரு துறை திடீர் கூட்டாய்வு குறித்த செயல்முறைகள். ந.க.எண்:- 99/2026/I-1, நாள்:- 03.07.2026. முன்னிலை- திரு.R.வெங்கடேசன், தனி வட்டாட்சியர் (நி.எ), புதிய பசுமைவெளி விமான நிலைய திட்டம், மண்டலம்-3, அலகு-4, காஞ்சிபுரம், (கூடுதல் பொறுப்பு) காஞ்சிபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் பொருள்:- திடீர் கூட்டாய்வு - காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காஞ்சிபுரம் - மாநகராட்சி அலுவலகம் - 03.07.2026 திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பாக. ஆணை:- காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் உறாஸ்பிடல் ரோடில், மாநகராட்சிக்கு சொந்தமான யாத்திரி நிவாஸ் கட்டடத்தில், தற்காலிகமாக இயங்கி வரும் காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகத்தில், பொது மக்களிடமிருந்து கூடுதலாக வரி வசூல் செய்வதாகவும், நகரமைப்பு அலுவலர்கள் மனை வரன்முறை படுத்துதல், கட்டிட வரைபட அனுமதி வழங்கவும், சுகாதார பிரிவில் பிறப்பு, இறப்பு போன்ற சான்றுகள் வழங்குவதற்காகவும், நில அளவை பிரிவில் இடங்களை பார்வையிட்டு உட்பிரிவு செய்வதற்கும் லஞ்சப்பணம் வசூலிப்பதாகவும் மற்றும் மாநகராட்சி பொறியியல் பிரிவில் சாலை அமைப்பு மற்றும் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவு நீர் அகற்றுதல், தெரு விளக்குகள் பராமறிப்பு, அரசு நிதி மற்றும் பொது நிதியில் இருந்து திட்ட செயலாக்கம் ஆகிய பணிகளில் முறைகேடுகள் நடப்பதாகவும் கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகத்தில், இன்று 03.07.2026-ம் தேதி மாலை சுமார் 16.00 மணி முதல் மேற்கொள்ளப்பட்ட இரு துறை திடீர் கூட்டாய்வின்போது நடைபெற்ற நிகழ்வின் விவரம் வருமாறு. இன்று 03.07.2026-ந்தேதி மாலை சுமார் 16.00 மணியளவில் இரு துறை தணிக்கையாக மாநகராட்சி அலுவலகத்திற்கு உள்ளே சென்று மாநகராட்சி ஆணையர் அலுவலக அறைக்கு சென்றபோது, அப்போது அங்கு மாநகராட்சி அணையரின் நேர்முக உதவியாளர் திரு.ஆனந்தன், அலுவலக உதவியாளர் திரு.புஷ்பராஜ் மற்றும் உதவியாளர்

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.03/AC/2026/KM, U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

திரு.வினோத்குமார் ஆகியோர்கள் பணியிலிருந்தவர்களிடம். துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராகிய நான். என்னை அறிமுகம் செய்துகொண்டு. என்னுடன் வந்திருந்த காவல் துணை கண்காணிப்பாளர் திரு.க.வே.கலைசெல்வம். காவல் ஆய்வாளர் திருமதி.கீதா. உதவி ஆய்வாளர் திரு.சிதம்பரம். சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி.ஜமுனா மற்றும் விஜிலன்ஸ் குழுவினரை அறிமுகம் செய்துகொண்டு மநாகராட்சி ஆணையர் குறித்து கேட்டபோது. அவர் மதிய உணவிற்கு ஆணையர் குடியிருப்பிற்கு சென்றிருப்பதாக தகவல் தெரிவித்தார். பின்னர் நேர்முக உதவியாளர் திரு.ஆனந்தன் அவர்கள் மூலமாக ஆணையருக்கு செல்போனில் தொடர்பு கொண்டு. அலுவலக சோதனைக்கு வந்திருப்பதாக தகவல் தெரிவித்து. அலுவலகம் வருமாறு தெரிவிக்கப்பட்டது. பின்னர் வருவாய் பிரிவு அலுவலக அறையில் ஆஜரில் இருந்த கண்காணிப்பாளர். (கூ.பொ) உதவி ஆணையர் திரு.வரதராஜன் மற்றும் பொறியியல் பிரிவில் இருந்த இளநிலை பொறியாளர் திரு.வைத்தியநாதன் ஆகியோர்களை ஆணையர் அலுவலக அறைக்கு வரவைத்து. நானும். என்னுடன் வந்திருந்த மேற்படி காஞ்சிபுரம் விஜிலன்ஸ் குழுவினரை அறிமுகம் செய்துகொண்டிருந்தபோது. அப்போது சாப்பிட சென்றிருந்த மாநகராட்சி ஆணையர் திரு.ரா.வினோத் அவர்கள் வெளியிலிருந்து மாலை சுமார் 16.15 மணிக்கு அவரது அலுவலக அறைக்கு வந்தவரிம். நான் என்னையும். என்னுடன் வந்திருந்த காவல் துணை கண்காணிப்பாளர். காவல் ஆய்வாளர் மற்றும் காஞ்சிபுரம் விஜிலன்ஸ் குழுவினரை அறிமுகம் செய்துவைத்து. அலுவலக சோதனைக்கு வந்திருப்பதாக தகவலை தெரிவித்து. சோதனைக்கு ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொண்டேன். பின்னர் மேற்படி மாநகராட்சி அலுவலகமானது. தெற்கு பார்த்தவாறு தலைவாசல் அமைந்திருந்தது. மேற்படி அலுவலகமானது. மேற்கு பக்கமாக 1) மாநகராட்சி ஆணையாளரின் அலுவலக அறையும். அதையடுத்து 2) மாநகராட்சி மேயரின் அலுவலக அறையும். அதனையடுத்து 3) மேயரின் நேர்முக உதவியாளரின் அலுவலக அறையும். அதற்கு எதிர்புறமாக 4) வருவாய் பிரிவு அலுவலக அறையும். அதனையடுத்து 5) தணிக்கை பிரிவு அலுவலக அறையும். அதனையடுத்து 6) துணை மேயரின் அலுவலக அறையும். அதனையடுத்து 7) மாநகர நகர்நல அலுவலரின் அலுவலக அறையும். அதனையடுத்து 8) மாநகர பொறியாளர் அலுவலக அறையும். அவ்வறைக்கு எதிரில் 9) மாநகராட்சி உதவி பொறியாளர் அலுவலக அறையும். அதனையடுத்து 10) பொறியியல் பிரிவு

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.03/AC/2026/KM, U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

அலுவலக அறையும். அதனையடுத்து 11) பொது சுகாதார பிரிவு அலுவலக அறையும், அதனையடுத்து 12) பொதுப்பிரிவு அலுவலக அறையும். பொதுப்பிரிவு அலுவலக அறைக்கு உள்ளே வலதுபுறமாக 13) வரி வதூல் மைய அலுவலகமும். அதற்கு எதிரில் 14) தேர்தல் பிரிவு அலுவலக அறையும். அதற்குஉள்புறமாக 15) நகரமைப்பு பிரிவு அலுவலக அறையும் அமைந்துள்ளது. பின்னர் மாநகராட்சி ஆணையரின் அலுவலக அறை மற்றும் ஆணையரின் நேர்முக உதவியாளர் அறையில் இருந்த பணியாளர்கள் விவரம் பின்வருமாறு.

வ. எ ண்.	ஆஜரில் இருந்த அலுவலக பணியாளர்கள்	வைத்திருந்த இருப்புத்தொக ை	விவரம்
1.	திரு.ரா.வினோத், மாநகராட்சி ஆணையர்.	ரூ.300/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
2.	திரு.பா.ஆனந்தராஜ், ஆணையரின் நேர்முக உதவியாளர்.	--	பணம் ஏதும் இல்லை.
3.	திரு.சே.புஷ்பராஜ், அலுவலக உதவியாளர்	ரூ.2,000/-	தனது சொந்த ஊர் கடலூருக்கு செல்லவேண்டியும் மற்றும் சொந்த செலவிற்காகவும் கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அவரின் விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அப்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மாநராட்சி ஆணையரின் அலுவலக அறையை அடுத்து அமைந்துள்ள மாநகராட்சி வருவாய் பிரிவு அலுவலக அறைக்குள் சென்றபோது. வருவாய் பிரிவு அலுவலக பணியாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் தனிநபர்கள் மேற்படி அலுவலக அறையில் இருந்தார்கள். அவர்களிடம் விஜிலன்ஸ் சோதனைக்கு வந்திருப்பதாக அறிமுகம் செய்துகொண்டு. மாநகராட்சி ஆணையர் திரு.ரா.வினோத் மற்றும் கண்காணிப்பாளர், (கூ.பொ) உதவி ஆணையர் திரு.வரதராஜன் ஆகியோர் முன்னிலையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அறையில் இருந்த பணியாளர்கள். ஒப்பந்ததாரர்கள் மற்றும் தனிநபர்களின் விவரம் பின்வருமாறு.

வ. எண் .	ஆஜரில் இருந்த அலுவலக பணியாளர்கள்	வைத்திருந்த இருப்புத் தொகை	விவரம்
1.	திரு.வரதராஜன், கண்காணிப்பாளர். (கூ.பொ) உதவி ஆணையர்.	ரூ.55/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.03/AC/2026/KM, U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

2.	திருமதி.ஜ.எம்.சாருமதி. மக்கள் தொகை கணக்கீட்டாளர் (தற்காலிக பணியாளர்).	-	பணம் ஏதும் இல்லை.
3.	திருமதி.ஏ.புனிதா. வருவாய் உதவியாளர் / பில் கலெக்டர்.	ரூ.70/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
4.	திருமதி.என்.நாகஜோதி. வருவாய் உதவியாளர்.	ரூ.145/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
5.	திருமதி.பார்வதி. இளநிலை உதவியாளர்.	ரூ.200/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
6.	திருமதி.ஜே.சாஉறினா. கணினி உதவியாளர் (ஒப்பந்த பணியாளர்)	ரூ.32/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
7.	திரு.குட்டியப்பனம். பதிவறை எழுத்தர்.	-	பணம் ஏதும் இல்லை.
8.	திரு.பா.லிங்கேஷ். ஒப்பந்த பணியாளர் / மக்கள் தொகை கணக்கீட்டாளர்.	ரூ.40/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
9.	திரு.செ.டில்லிபாபு, அலுவலக உதவியாளர்	ரூ.145/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
10	திருமதி.எம்.சந்தவள்ளி, ஆ-1 உதவியாளர்.	ரூ.3,220/-	மேற்படி நபரை . பெண் காவல் ஆய்வாளர் திருமதி.கீதா அவர்கள் மூலமாக அவரது இருக்கையில் சோதனை செய்தபோது, அவரது டேபில் டிராயரில் இருந்த ஸ்டேனரி பவுச்சில், ஸ்டாப்லர் பின்கள், ஷார்பனர், இரப்பர் போன்றவையுடன் கூடிய பணம் ரூ.3,220/- இருந்தது. அப்பணம் பற்றி விசாரிக்க மதிய உணவிற்காக வீட்டிற்கு சென்று வரும்போது, மளிகை பொருட்கள் வாங்குவதற்காக கொண்டுவந்ததாக தெரிவித்தார். ஆனால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லாதமையால் மேற்படி பணம் என்னால் கைப்பற்றப்பட்டது.
ஒப்பந்ததாரர்கள் / தனிநபர்கள்			
11	திரு.வி.வசந்த். த/பெ.விஜயகுமார். ஒப்பந்தாரர், எண்.9, சண்முகா நகர், பூங்கா நகர், காஞ்சிபுரம்.	ரூ.1,130/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
12	திரு.ரா.சரவணகுமார். த/பெ.ராஜேந்திரன். எஸ்.எம்.ஜி.நகர். காஞ்சிபுரம்.	ரூ.1/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.03/AC/2026/KM, U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

13	திரு.பா.கருப்பசாமி, த/பெ.பால்ராஜ், எண்.36, முல்லை நகர், ஓரிக்கை, காஞ்சிபுரம்.	ரூ.820/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
14	திரு.ந.பாலாஜி, த/பெ.நரசிம்மன்.	ரூ.600/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
15	திரு.தே.யுவராஜ், த/பெ.தேவராஜன், காஞ்சிபுரம்	ரூ.6,500/-	தனது வீட்டு வரி அதிகபடியாக இருந்தமையால் அதை விசாரிப்பதற்காக, அலுவலகம் வந்ததாகவும், மலிகை பொருட்கள் வாங்கவேண்டி பணம் ரூ.6,500/- வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளகூடியதாக இருந்தமையால், மேற்படி பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
16.	திரு.து.பிரியதம் குமார், த/பெ.துரைசாமி, டீம் லீடர், புரோஜக்ட் மேனேஜ்மெண்ட் கன்சல்டன்ஸி, (யூ.ஜி.டி), காஞ்சிபுரம்.	ரூ.5,470/-	தான் ஒப்பந்தாரராக குடிநீர் திட்டம் & பாதாள சாக்கடை பணி தொடர்பாக வருவாய் பிரிவிற்கு வந்து, வீட்டு வரி செலுத்துபவரின் பட்டியல் பெறுவது சம்பந்தமாக வந்ததாகவும், தன்னிடமிருந்த பணம் ரூ.5,470/- சென்னையிலிருந்து வருவதால், பயன செலவு & சாப்பாடு செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளகூடியதாக இல்லாதமையால், மேற்படி பணம் என்னால் கைப்பற்றப்பட்டது.

மேற்படி வருவாய் பிரிவு அலுவலகத்திற்கு எதிரில் இருந்த மேயரின் அலுவலக அறை மற்றும் மேயரின் நேர்முக உதவியாளர் அறையை சோதனை செய்தபோது, யாதொரு பொருளும் கைப்பற்றப்படவில்லை, மேலும் மேயரின் நேர்முக உதவியாளர் அலுவலக அறையில் இருந்த பணியாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் தனிநபர்களின் விவரம் பின்வருமாறு.

வ. எ ண்.	ஆஜரில் இருந்த அலுவலக பணியாளர்கள்	வைத்திருந்த இருப்புத்தொகை	விவரம்
1.	திரு.எ.மோகன்ராஜ், இளநிலை உதவியாளர்,	ரூ.1,100/-	தான் வெளியூரிலிருந்து வருவதால், பயன செலவு மற்றும் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணம் ரூ.1,100/- ஐ திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
2.	திரு.மு.ஜெயசீலன், தொகுப்பு ஊதிய பணியாளர்	ரூ.1,620/-	தனது சொந்த செலவிற்கும், வீட்டிற்கு மலிகை பொருட்கள் வாங்க கொண்டுவந்திருப்பதாக தெரிவித்தார், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அப்பணம் ரூ.1,620/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
3.	திருமதிர.லட்சுமி, அலுவலக உதவியாளர்.	ரூ.370/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.03/AC/2026/KM, U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

4.	திரு.பா.பாலாஜி. ஒப்பந்த பணியாளர் / மேயரின் அலுவலக உதவியாளர்.	ரூ.410/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
ஒப்பந்ததாரர்கள் / தனிநபர்கள்			
5	திரு. அ. சுஜய், த/பெ. அன்பழகன், புதை வடிகால் ஒப்பந்தாரர். பள்ளூர் கிராமம். அரக்கோணம் TK., இராணிபேட்டை மாவட்டம்.	ரூ.1,580/-	தனது வாகனத்திற்கு பெட்ரோல் போடுவதற்கும், மருத்துவ செலவிற்காகவும் கொண்டுவந்ததாக தெரிவித்ததால், அவரின் விளக்கம் ஏற்றுகொண்டு அப்பணம் திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
6	திரு.மா.இளங்கோவன். த/பெ.மாசிலாமணி. மின்பணி ஒப்பந்ததாரர். பிள்ளையார் பாளையம். காஞ்சிபுரம்.	ரூ.940/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி மேயரின் நேர்முக உதவியாளர் அலுவலக அறைக்கு அடுத்தாக அமைந்துள்ள தணிக்கை பிரிவு அலுவலக அறை இருந்தது. அவ்வறையில் சோதனை செய்தபோது. யாதொரு பொருளும் கைப்பற்றப்படவில்லை. மேற்படி அறையில் இருந்த இருந்த பணியாளர்கள் விவரம் பின்வருமாறு.

வ. எண்.	ஆஜரில் இருந்த அலுவலக பணியாளர்கள்	வைத்திருந்த இருப்புத்தொகை	விவரம்
1.	திருமதி.கிருஷ்ணவேனி. உள்தனிக்கை ஆய்வாளர்.	ரூ.400/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
2.	திருமதி.அபிபா. உதவி ஆய்வாளர், உள்தனிக்கை.	ரூ.200/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
3.	செல்வி.இந்துமதி. உதவி ஆய்வாளர், உள்தனிக்கை	ரூ.350/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி தனிக்கை பிரிவு அலுவலக அறைக்கு அடுத்தார்போல் அமைந்துள்ள துணை மேயரின் அலுவலக அறையும், மாநகர நல அலுவலரின் அலுவலக அறையும் மற்றும் மாநகர பெறியாளர் அலுவலக அறையும் பூட்டியிருந்தது. ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் சாவி கொண்டுவரப்பட்டு மேற்படி அறைகளை திறந்து சோதனை செய்தபோது. எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேற்படி அறைக்கு எதிரில் அமைந்துள்ள உதவி பொறியாளர் அலுவலக

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.03/AC/2026/KM, U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

அறையினை சோதனை செய்தபோது எதுவும் கைப்பற்றப்படவில்லை. உதவி பொறியாளர் அலுவலக அறையில் இருந்த பணியாளர்கள் விவரம் பின்வருமாறு.

வ. எ ண்.	ஆஜரில் இருந்த அலுவலக பணியாளர்கள்	வைத்திருந்த இருப்புத்தொகை	விவரம்
1.	திரு.த.வைத்தியநாதன், இளநிலை பொறியாளர்.	ரூ.30/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
2.	திருமதி.சி.இசைவாணி, தொழில்நுட்ப உதவியாளர்.	ரூ.70/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி உதவி பொறியாளர் அலுவலக அறையினையடுத்து அமைந்துள்ள பொறியியல் பிரிவு அலுவலக அறையை, மாநகராட்சி ஆணையர், கண்காணிப்பாளர் (கூ.பொ) உதவி ஆணையர் மற்றும் உதவி பொறியாளர் திரு.வைத்தியநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் சோதனை செய்தபோது மேற்படி அறையில் இருந்த பணியாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் தனிநபர்களின் விவரம் கீழ்கண்டவாறு.

வ. எ ண்.	ஆஜரில் இருந்த அலுவலக பணியாளர்கள்	வைத்திருந்த இருப்புத்தொகை	விவரம்
1.	திரு.ஜ.அருண்குமார், உதவி பொறியாளர்.	--	பணம் ஏதும் இல்லை.
2.	திருமதி.அருணா, உதவி பொறியாளர்.	ரூ.20/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
3.	திரு.கு.முருகன், தொழில்நுட்ப உதவியாளர்.	ரூ.280/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
4.	திரு.செ.ஞானசிகாமணி, தெழில்நுட்ப உதவியாளர்.	ரூ.1,040/-	தனது தந்தைக்கு மருந்து வாங்குவதற்காகவும், சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் அப்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
5.	திருமதி.லட்சுமி, தொழில்நுட்ப உதவியாளர்	--	பணம் ஏதும் இல்லை.
6.	திரு.லோ.துரைமுருகன் தொழில்நுட்ப உதவியாளர் / ஒப்பந்த பணியாளர்.	ரூ.30/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.03/AC/2026/KM, U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

7.	திருமதி.க.சித்ரா, உதவியாளர்	--	பணம் ஏதும் இல்லை.
8.	திரு.ப.அகிலன், உதவியாளர்.	ரூ.100/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
9.	திரு.ப.இளங்கோவன், உதவியாளர்	ரூ.1,318/-	தனது வாகனத்திற்க பெட்ரோல் போடுவதற்காகவும் மற்றும் சொந்த செலவிற்காகவும் கொண்டுவந்ததாக தெரிவித்ததால். அப்பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
10	திருமதி.வெ.சுந்தரி, இளநிலை உதவியாளர்	ரூ.500/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
11	திருமதி.வி.சுஜாதா, இளநிலை உதவியாளர்	--	பணம் ஏதும் இல்லை.
12.	செல்வி.பிரியங்கா. தட்டச்சர் / ஒப்பந்த பணியாளர்.	ரூ.14/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
13.	திரு.தி.மோகன்ராஜ். D.E.O. (Out Source)	ரூ.200/-	சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் பணத்தை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
ஒப்பந்ததாரர் / தனிநபர்கள்			
14.	திரு.மு.பவித்ராஜ், த/பெ.முத்து. Out Sourcing / Private Individual, எண்.50, நாகலத்தமேடு, அரசமர பின்தெரு, சின்ன காஞ்சிபுரம்.	ரூ.4,020/-	தான் காஞ்சிபுரத்தில் வசிப்பதாகவும், இன்றுதான் Out Sourcing பணிக்கு பொறியியல் பிரிவிற்கு வந்திருப்பதாகவும் தெரிவித்தார். ஆனால் அதற்குண்டான பணியாணை எதுவும் வழங்கியதாக தெரியவில்லை. மேலும் தன்னிடமிருந்த பணம் குடும்ப செலவிற்காக எடுத்து வந்திருப்பதாக தெரிவித்தார், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளகூடியாக இல்லாதமையால். அப்பணம் என்னால் கைப்பற்றப்பட்டது.
15.	திரு.பா.ரஞ்சித் குமார், த/பெ.பாஸ்கரன். ஒப்பந்ததாரர், ஜி-1, சுராஜ் புளூ பெல் அப்பார்ட்மெண்ட், ஜாஸ்மின் கார்டன், டாக்டர்ஸ் காலனி, முடிச்சூர் ரோடு, சென்னை-45	ரூ.17,500/-	தான் ஒரு ஒப்பந்ததாரர் என்றும், இன்று காலை படப்பை சார்-பதிவாளர் அலுவலகத்தில் ஆவண பதிவு தொடர்பாக வந்து. வேலைகளை முடித்துவிட்டு மதியம் சுமார் 01.30 மணியளவில் காஞ்சிபுரம் மாநகராட்சி அலுவலகத்திற்கு வந்து தான் ஏற்கனவே செய்து முடித்திருந்த மஞ்சள்நீர் கால்வாய் பணிக்கு பணம் விடுவிப்பது சம்மந்தமாக ஆணையரை சந்தித்துவிட்டு, பொறியியல் பிரிவில் இருந்ததாகவும். தன்னிடமிருந்த பணம் ரூ.17,500/- டோக்கன் அட்வான்ஸ்காக பெற்ற பணத்தை திருப்பி கொடுப்பதற்காகவும். சொந்த செலவிற்காக கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவித்தார், ஆனால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளகூடியதாக இல்லாதமையாலும். மேற்படி பணத்தை மாநகராட்சி அலுவலக பணியாளர்களுக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டுவந்திருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது.

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.03/AC/2026/KM, U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

மேலும் அலுவலக பொறியியல் பிரிவு அலுவலகத்திற்கு அடுத்து அமைந்துள்ள பொது சுகாதார பிரிவு அலுவலகத்தில் சோதனை செய்தபோது பணியிலிருந்த பணியாளர்கள் சுகாதார ஆய்வாளர்கள் 1) திரு.வி.சீனிவாசன் (பணம் ஏதும் இல்லை), 2) செல்வி.பானுபிரியா (பணம் ஏதும் இல்லை), 3) திருமதி.பார்கவி (ரூ.350/-), 4) திருமதி.அலகுஜோதி (பணம் ஏதும் இல்லை), 5) திருமதி.பிரவீனா (ரூ.50/-), உதவியாளர்கள் 6) திருமதி.லட்சுமி (பணம் ஏதும் இல்லை), 7) திருமதி.ஆனந்தி (ரூ.100/-), 8) திரு.சா.வசந்தன், இளநிலை உதவியாளர் (ரூ.16/-), 9) திருமதி.பா.சாந்தி, அலுவலக உதவியாளர் (ரூ.210/-), டேட்டா எண்ட்ரி ஆப்பரேட்டர்கள் 10) திருமதி.க.தனலட்சுமி, (ரூ.38/-), 11) திருமதி.வர்கீஸ் பீ (ரூ.500/-), 12) திருமதி.ப.லட்சுமி, (ரூ.10/-), 13) திரு.பூ.கதிரவன், (பணம் ஏதுமில்லை), 14) செல்வி.தே.சகிலா (பணம் ஏதுமில்லை), 15) திருமதி.பானுமதி (ரூ.25/-), 16) திருமதி.கற்பகம் (ரூ.250/-), 17) திருமதி.பெ.காமாட்சி, தொகுப்பு ஊதிய பணியாளர் / தூய்மை பணியாளர் (ரூ.80/-), தனிநபர்கள் 18) திரு.ஜீவரத்தினம், த/பெ.ஆறுமுகம், காஞ்சிபுரம் (ரூ.300/-), 19) திரு.ஏ.பிரசாந்த், த/பெ.அண்ணாமலை, காஞ்சிபுரம் (ரூ.180/-) மற்றும் 20) திரு.தினேஷ், த/பெ.மணி, ஐயம்பேட்டை, (ரூ.50/-) ஆகியோர் இருந்தனர், அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு சொந்த செலவிற்காக கொண்டுவந்திருப்பதாக தெரிவித்தமையால் அப்பணத்தை அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பொது சுகாதார பிரிவு அலுவலகத்திற்கு அடுத்து அமைந்திருந்த பொதுப்பிரிவு அலுவலகத்தினை சோதனை மாநகராட்சி ஆணையர், கண்காணிப்பாளர் (கூ.பொ) உதவி ஆணையர் ஆகியோர் முன்னிலையில் சோதனை செய்தபோது, அங்கிருந்த பணியாளர்கள் 1) திருமதி.ஜே.ரேவதி, உதவியாளர் (ரூ.450/-), 2) திரு.எஸ்.பரத்குமார் வருவாய் உதவியாளர் (ரூ.680/-), 3) திரு.முகமது ரபிக், இளநிலை உதவியாளர் (ரூ.85/-), 4) திருமதி.நாடிதேவி, பதிவறை எழுத்தர் (ரூ.200/-), 5) திருமதி.எருசலம், பதிவறை எழுத்தர் (ரூ.100/-), 6) திரு.ஏழுமலை, தட்டச்சர் / தினக்கூலி பணியாளர் (ரூ.770/-), 7) திருமதி.ஆனந்தி, அலுவலக உதவியாளர் (ரூ.200/-), டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர்கள் 8) செல்வி.பரமேஸ்வரி (ரூ.760/-), 9) செல்வி.பிரியா (ரூ.120/-), கொசு ஒழிப்பு பணியாளர்கள் 10) திரு.வேல்முருகன் (ரூ.84/-), 11) திரு.ஜலால்பாஷா (ரூ.100/-) ஆகியோர் இருந்தனர், அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு சொந்த செலவிற்காக கொண்டுவந்திருப்பதாக தெரிவித்தமையால் அப்பணத்தை அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறையில் பில் கவுன்டரில்

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.03/AC/2026/KM, U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

இருந்த திருமதி.நிர்மலா. வருவாய் உதவியாளர் என்பவரை சோதனை செய்தபோது. அவரிடம் ரூ.100/- இருந்தது. சொந்த செலவிற்காக கொண்டுவந்திருப்பதாக தெரிவித்தமையால். அப்பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் வரி வசூல் மையத்தில் பணியில் இருந்த திரு.பரமசிவம் என்வரிடம் பணம் ஏதுமில்லை. மேலும் திருமதி.நிர்மலா. வருவாய் உதவியாளர் கேஷ் கவுன்டரில் பணம் ரூ.1,85,091/-ம் இருந்தது. அந்த பணம் பொதுமக்களிடமிருந்து வீட்டுவரி வசூல் செய்த பணம் என்று தெரிவித்தமையால் ஆணையர் முன்னிலையில் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் திரு.பரமசிவம். வரி வசூல் மையத்தில் பணம் ரூ.63,272/-ம் இருந்தது. அதுபற்றி கேட்க பிறப்பு & இறப்பு சான்று தொடர்பாக வசூலிக்கப்பட்ட பணம் என்றும். தனியாக பணம் ரூ.1,18,250/- இருந்தது இதை பற்றி கேட்க. செவிலிமேடு கவுண்டரில் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணம் என்று தெரிவித்து. அது சம்மந்தமான பிறப்பு & இறப்பு சான்று தொடர்பாக வசூல் செய்த விவரத்தை கணினியிலிருந்து பிரிண்ட் எடுத்து ஆஜர் செய்ததை சரிபார்த்து. மேற்படி இரண்டு பணத்தையும் அவரிடமே ஆணையர் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டது. மேலும் அலுவலகத்தில் Cash Counter ல் வரி வசூல் செய்யப்பட்ட பிள்ளையார் பாளையம் திரு.அசோக் மூலமாக பணம் ரூ.74,395/- டி.கே.நம்பி தெரு திரு.ஜெயராமன் மூலமாக பணம்ரூ.1,27,870/- மற்றும் எல்லப்பா நகர் பார்க் திருமதி.சுந்தரி மூலமாக பணம் ரூ.1,18,230/- சரிபார்க்கப்பட்டு மேற்படி வசூல் செய்த அனைத்து வரிப்பணங்களும் மாநகராட்சி ஆணையர். உதவி ஆணையர் (பொறுப்பு) திரு.வரதராஜன் மற்றும் இளநிலை பொறியாளர் திரு.வைத்தியநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் மாநகராட்சி கருவூலத்தில் திரும்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் பொதுப்பிரிவு அலுவலகத்திற்கு அடுத்தாக அமைந்துள்ள தேர்தல் பிரிவு அலுவலகத்தில் பணியிலிருந்த பணியாளர்கள் 1) திரு.வினோத்குமார். உதவியாளர் (ரூ.350/-) & 2) திருமதி.சாந்தி. டி.பி.சி பணியாளர் (ரூ.210/-)ம் அதனையடுத்து நகரமைப்பு பிரிவு அலுவலகத்தில் பணியிலிருந்த 1) திரு.ரவீந்திரன். நகர திட்டமிடுநர் (ரூ.520/-). உதவி பொறியாளர்கள் (திட்டம்) 2) திரு.கணேசரங்கன் (ரூ.540/-). 3)செல்வி.சுவேதா (ரூ.60/-), 4) திருமதி.திவ்யா (ரூ.510/-). 5) திரு.மனோஜ் (பணம் இல்லை). 6) தீபிகா. தட்டச்சர் (பணம் இல்லை), தெழில்நுட்ப உதவியாளர்கள் 7) திருமதி.பிரேமாவதி (பணம் இல்லை), 8) திருமதி.சுதேசினி (ரூ.80/-). 9) திரு.தமிழ்செல்வன் (ரூ.100/-). 10) திருமதி.கீதா (ரூ.500/-).

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.03/AC/2026/KM, U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

11) திருமதி.ராதிகா, டிபிசி பணியாளர் (பணம் ஏதுமில்லை) ஆகியோர் இருந்தனர். அவர்கள் வைத்திருந்த பணத்திற்கு சொந்த செலவிற்காக கொண்டுவந்திருப்பதாக தெரிவித்தமையால் அப்பணத்தை அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் நகரமைப்பு பிரிவு அலுவலகத்தில் கீழ்கண்ட பணியாளர்களை சோதனை செய்த விவரம் பின்வருமாறு

வ. எண்	ஆஜரில் இருந்த அலுவலக பணியாளர்கள்	வைத்திருந்த இருப்புத் தொகை	விவரம்
1.	திரு.சுபாஷ், உதவி பொறியாளர் (திட்டம்)	ரூ.5,500/-	தான் தாம்பரத்திலிருந்து வருவதாகவும், அவரச தேவைக்காக பணம் ரூ.5,500/- வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். ஆனால் மேற்படி பணம் தனித்தனியாக மடித்து வைத்திருந்தமையால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லாதமையால், சந்தேகத்தின் அடிப்படையில் தகுந்த முகாந்திரம் தெரிவிக்காத பணமாக கருதி அப்பணம் என்னால் கைப்பற்றப்பட்டது.
2.	திரு.பன்னீர்செல்வம், அலுவலக உதவியாளர்	ரூ.2,000/-	தான் வைத்திருந்த பணம், மருத்துவ செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்துள்ளார். ஆனால் மேற்படி பணம் தனித்தனியாக மடித்து வைத்திருந்தமையால், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லாதமையால், சந்தேகத்தின் அடிப்படையில் தகுந்த முகாந்திரம் தெரிவிக்காத பணமாக கருதி அப்பணம் என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும் அவர் பயன்படுத்தும் செல்போன் (9994293427) GPay வை சோதனை செய்தபோது, கடந்த 14.04.2026 முதல் 23.05.2026 காலகட்டத்தில் பஞ்சாப் நேஷனல் வங்கி கணக்கு எண்.0283000100500373-ல் பணம் ரூ.47,000/- பரிவர்தனை மூலமாக பெறப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. அதற்கு அவர், கடனாக ஒப்பந்தாரர்களிடமிருந்து பெற்றதாக தெரிவித்தார். மேலும் இதற்காக பிரிண்ட் எடுத்து (பக்கம் 1 முதல் 2) தாக்கல் செய்ததை மாநகராட்சி ஆணையர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது.
3.	திரு.பரத்குமார், வருவாய் உதவியாளர், வருவாய் பிரிவு	Phone -Pay	திரு.பரத்குமார் பயன்படுத்தும் செல்போன் (8072126928) Phone Pay வை சோதனை செய்தபோது, கடந்த 04.05.2026 முதல் 01.07.2026 காலகட்டத்தில் பஞ்சாப் நேஷனல் வங்கி கணக்கு எண்.0283000104065926-ல் பணம் ரூ.1,92,911/- பரிவர்தனை மூலமாக பெறப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. அதற்கு அவர், அவரது வார்டிற்கு உட்பட்ட வரிசெலுத்துபரிடமிருந்து வரித்தொகையாக தனது Phone Pay மூலமாக பெற்று பின்னர் ரசீது போட்டு கொடுத்ததாகவும் தெரிவித்தார். மேலும் இதற்காக பிரிண்ட் எடுத்து (பக்கம் 1 முதல் 28) தாக்கல் செய்ததை மாநகராட்சி ஆணையர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது.

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.03/AC/2026/KM, U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

4	திரு.அசோக் குமார், பதிவறை எழுத்தர், பிள்ளையார் பாளையம் வரி வசூலிக்கும் மையம், கிருஷ்ணன் தெரு, காஞ்சிபுரம்.	G-Pay	இவர் பயன்படுத்தும் செல்போன் (9790040906) G-Pay வை சோதனை செய்தபோது, கடந்த 03.05.2026 முதல் 02.07.2026 காலகட்டத்தில் யூனியன் வங்கி (கணக்கு எண் 407402010008617) பஞ்சாப் நேஷனல் வங்கி & இந்தியன் வங்கி ஆகிய வங்கிகளின் கணக்குகள் மூலமாக பணம் ரூ.1,48,484/- பரிவர்த்தனை மூலமாக பெறப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. அதற்கு அவர், அவரது வார்டிற்கு உட்பட்ட வரிசெலுத்துபரிடமிருந்து வரித்தொகையாக தனது G-Pay மூலமாக பெற்று பின்னர் ரசீது போட்டு கொடுத்ததாகவும் தெரிவித்தார். மேலும் இதற்காக பிரிண்ட் எடுத்து (பக்கம் 1 முதல் 55) தாக்கல் செய்ததை மாநகராட்சி ஆணையர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது.
5	திரு.மோகன் ராஜ், இளநிலை உதவியாளர், பொது பிரிவு மற்றும் மேயரின் உதவியாளர்	G-Pay	இவர் பயன்படுத்தும் செல்போன் (9750525348) G-Pay வை சோதனை செய்தபோது, கடந்த 05.05.2026 முதல் 02.07.2026 காலகட்டத்தில் கனரா வங்கி (கணக்கு எண்26961010017922) கணக்கு மூலமாக பணம் ரூ.50,210/- பரிவர்த்தனை மூலமாக பெறப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. அதற்கு அவர், சம்பளம் வருவதற்கு கால தாமதம் ஏற்படுவதால் நண்பர்களிடமிருந்து G-Pay மூலமாக கடனாக பெற்ற பணம் என்று தெரிவித்தார். மேலும் இதற்காக பிரிண்ட் எடுத்து (பக்கம் 1 முதல் 31) தாக்கல் செய்ததை மாநகராட்சி ஆணையர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது.

மேற்படி இருதுறை கூட்டாய்வின் போது பணியாளர்கள் 1) திருமதி.சந்தவள்ளி, 2) திரு.பன்னீர்செல்வம், 3) திரு.சுபாஷ், 4) தற்காலிக பணியாளர் திரு.பவித்ராஜ் மற்றும் ஒப்பந்ததாரர்கள் 5) திரு.ரஞ்சித் குமார், 6) திரு.பிரியதம் குமார் ஆகியோரிடமிருந்து மொத்தப் பணம் ரூ.37,710/- கைப்பற்றப்பட்ட அவர்களிடமிருந்து தன்னிலை விளக்கக்கடிதம் மற்றும் என்னால் வாக்குமூலம் பெறப்பட்டது. அதே போல G-Pay மற்றும் Phone-Pay மூலம் சந்தேகப்படும்படியான பணப்பரிவர்த்தனைகள் செய்திருந்த பணியாளர்கள் 1) திரு.அசோக், 2)திரு.பரத்குமார், 3) திரு.பன்னீர்செல்வம், 4) திரு.மோகன்ராஜ் ஆகியோரிடமிருந்து தன்னிலை விளக்கக்கடிதங்கள் மற்றும் திரு.பரத்குமார் மற்றும் திரு.பன்னீர்செல்வம் ஆகியோரிடம் என்னால் வாக்குமூலமும் மற்றும் பணப்பரிவர்த்தனைகள் தொடர்பான அடங்கிய விவரங்களை தனித்தனியாக பிரிண்ட் அவுட் எடுத்து அதில் ஆணையர் கையொப்பம் பெறப்பட்டது. மேலும்

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.03/AC/2026/KM, U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

அலுவலகத்தில் பராமரிக்கப்படும் வருகை பதிவேடு ஜூலை 2026, 1) Town Planning Section, 2) Engineering Section, 3) Public Health Section, 4) Revenue Section, 5) General Section ஆகியவற்றின் நகல் எடுத்து உண்மை நகல் என மாநகராட்சி ஆணையாளர் அவர்களிடம் கையொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றினே். மேலும் மாநகராட்சியில் Cash Counter ல் பெறப்பட்ட Remittance Register, 1) திருமதி.நிர்மலா ID No.1018050 (பக்கம் 1 முதல் 10), 2) திரு.மோகன்ராஜ், காசாளர் ID No.1018351 (பக்கம் 1 முதல் 5), பிள்ளையார் பாளையம் வரி வசூல் மையம் 3) திரு.அசோக்குமார் அவர்களால் வரி வசூல் செய்யப்பட்டது ID No.1018031 (பக்கம் 1 முதல் 3), டி.கே.நம்பி தெரு 4) திரு.ஜெயராமன் அவர்களால் வசூல் செய்யப்பட்டது ID No.1018053 (பக்கம் 1 முதல் 4) மற்றும் 5) திருமதி.எம்.சுந்தரி எல்லப்பா நகர் பார்க் வரி வசூல் மையம் அவர்களால் வசூல் செய்யப்பட்டது ID No.1018089 (பக்கம் 1 முதல் 4) அலுவலக கணினியில் பிரின்ட் எடுக்கப்பட்டு மாநகராட்சி ஆணையாளர் அவர்களிடம் கையொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றினே். மேலும் அலுவலகத்தில் **"லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் குற்றம்"** என்ற அறிவிப்பு பலகை வெளிப்பகுதியில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் அலுவலத்தில் இருந்த ஆண் மற்றும் பெண் பணியாளர்களுக்கு அவர்களது பணிக்கு எந்தவித இடையூறும் செய்யாமலும். அலுவலகத்தில் இருந்த எந்த பொருட்களுக்கும் சேதம் ஏற்படாமலும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனையின் போது யாருக்கும் எந்தவித மன உளைச்சலும் கொடுக்கவில்லை. அலுவலக பணியிலிருந்த பெண் பணியாளர்களை காவல் ஆய்வாளர் திருமதி.கீதா மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி.ஜமுனா ஆகியோர் மூலம் சோதனை செய்யப்பட்டது. மேற்படி அலுவலகம் நல்ல முறையில் மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் நல்ல முறையில் ஒப்படைக்கப்பட்டது. இந்த இரு துறை திடீர் கூட்டாய்வு இன்று 03.07.2026 தேதி மாலை 16.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு சுமார் 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

sd/- xxxx Tr.R.Vinoth, Commissioner, Kanchipuram Corporation	sd/- xxxx Tr.K.Varadharajan, Superintendent, i/c-Asst. Commissioner, O/o. the Kanchipuram Corporation	sd/- xxxx Tr.T.Vaithiyanathan, Junior Engineer, O/o. the Kanchipuram Corporation.	sd/- xxxx Tmt.Santhavalli, Assistant, Revenue Section, O/o. the Kanchipuram Corporation

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.03/AC/2026/KM, U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)

sd/- xxxx
Tr.Subash,
Asst. Engineer
(Planning),
Town Planning Section,
O/o. the Kanchipuram
Corporation

sd/- xxxx
Tr.Panneerselvam,
Office Assistant,
Town Planning Section,
O/o. the Kanchipuram
Corporation

sd/- xxxx
Tr.Pavitharaj,
Out Sourcing Staff,
Engineering Section,
O/o. the Kanchipuram
Corporation.

sd/- xxxx
Tr.Ranjithkumar,
S/o.Baskaran,
Contractor,
Mudichur Road,
Tambaram (West),
Chennai.

sd/- xxxx
Tr.Priyatham Kumar,
S/o.Duraisamy,
Contractor,
Vivekananda Nagar,
Kolathur, Chennai.

sd/- xxxx
Tr.Ashok Kumar,
Record Clerk,
Pillaiyar Palayam Collection
Centre, Kanchipuram.

sd/- xxxx
Tr.Bharathkumar,
Revenue Assistant,
O/o. the Kanchipuram
Corporation.

sd/- xxxx
Tr.Mohan Raj,
Junior Assistant,
O/o. the Kanchipuram
Corporation.

sd/- xxxx
Tr.Srinivasan,
Sanitary Inspector,
Public Health Section,
O/o. the Kanchipuram
Corporation.

sd/- xxxx
Tr.Ravinthran,
Town Planning Officer,
Town Planning Section,
O/o. the Kanchipuram
Corporation.

sd/- xxxx
Tmt.M.Jamuna,
SSI, V&AC,
Kanchipuram

sd/- xxxx
Tr.A.Chidambaram,
SI, V&AC,
Kanchipuram.

sd/- xxxx
Tmt.R.Geetha
Inspector of Police,
V & AC, Kanchipuram

sd/- xxxx
Tr.K.V.Kalaiselvam
Deputy Supt. of Police,
V & AC, Kanchipuram

sd/- xxxx
Tr.R.Vengitesan,
Spl. Tahsildhar (LA),
New Green Field Airport Scheme,
Zone-3, Unit-4, Kanchipuam,
i/c.Dy. Inspection Cell Officer,
Kanchipuram.

Received a Copy sd/- xxxx (R.VINOTH, 03/07/2026)

Honoured Sir,

On endorsement of DSP, V&AC, Kanchipuram, I registered a case in Kanchipuram V&AC, Cr.No.03/AC/2026/KM,U/s 7 (a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) on 04.07.2026 at 16.30 hrs. and tookup for the investigation.

The original FIR along with complaint enclosed with the Proceedings of the Spl. Tahsildhar (LA), New Green Field Airport Scheme, Zone-3, Unit-4, Kanchipuam, i/c.Dy. Inspection Cell Officer, Kanchipuram Tr.R.Vengidesan, connected documents and seized amount of Rs.37,710/- (un-explained money) at the O/o. the Kanchipuram City Municipal Corporation, Kanchipuram are submitted before the Hon'ble Principal District and Sessions Judge, Kanchipuram and other copies are submitted to superior officer concerned.

R.
04/07/26
VAO I Kanchipuram.